முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

<u>அ.வ.எண். 83/2023</u>

நாள். 12.07.2025 வா.சா.1 – திரு.அந்தோணி மிக்கேல்

த/பெ - திரு.செபஸ்தியான்

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் நான் 2 செட் அமைத்துள்ளேன். ஒரு ஆஸ்பெஸ்டாஸ் செட்டும், ஒரு ஓலை போட்டு தகர செட்டும் அமைத்துள்ளேன். கோழி தீவன பாத்திரங்கள் வாங்கி உள்ளேன் அதற்குரிய தொகையும் கேட்டு பிரதிவாதிகள் பெயரில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நீங்கள் நிறைய வாடகை பாக்கி வைத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

2) நீங்கள் கடைசியாக எந்த தேதியில் வாடகை செலுத்தினீர்கள் என்றால் 2022 ம் வருடம் ஏப்ரல் மாதம் என்று தோன்றுகிறது. ஏப்ரல் 2022 ஆண்டு முதல் தற்போது 2025 ம் ஆண்டு ஜுலை மாதம் இன்றைய தேதி வரை வாடகை எதுவும் செலுத்தவில்லை என்றால் சரி தான். கோழிப்பண்ணை நடத்துவதற்காக நீங்கள் கோழிப்பண்ணை செட் மற்றும் கோழிப்பண்ணைக்குரிய தீவனப் பாத்திரத்தையும் சேர்த்து தான் வாடகைக்கு எடுத்தீர்கள் என்றால் சரி தான்.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.07.12 18:52:21 +0530

3) நீங்கள் உங்கள் சாட்சியத்தல் கோழிப்பண்ணை பொருட்களை வாங்கி வைத்துள்ளதாக கூறியது பொய் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் உங்களுக்கு என்னென்ன பொருட்கள் வாடகைக்கு கொடுத்துள்ளார்கள் என்பதை பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரை பக்கம் 10 ல் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரி தான். ஆனால் 6 செட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது அது தவறாகும். அதில் 2 செட் நான் தான் போட்டேன். சாட்சியானவர் தானாக முன் வந்து பிரதிவாதியானவர் வாடகைக்கு கொடுக்கும் போதே 6 செட் அமைத்துக் கொள்ளுமாறு கூறினார்கள். 6 செட்டுக்கு வாடகை கொடுக்க வேண்டும் என்று கூறினார்கள். நீங்கள் கூறுவது பொய் என்றும் 5 ஓலை செட்டும் ஒரு ஆஸ்பெஸ்டாஸ் செட்டும் பிரதிவாதிகள் தான் உங்களுக்கு அமைத்து தந்தார்கள் என்றால் சரியல்ல.

4) நீங்கள் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன் ஒப்பந்தம் ஏதாவது போட்டீர்களா என்றால் போட்டேன். 3 குத்தகை ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டோம். அந்த 3 குத்தகை ஒப்பந்தங்களில் 2017, 2019 ல் அவ்வாறு இல்லை. கடைசியாக போட்ட ஒப்பந்தத்தில் உள்ளது. மேற்படி ஒப்பந்த ஆவணங்கள் **பி.வா.சா.ஆ.1 , பி.வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நீங்கள் வழக்கு தாக்கல் செய்யும் போது பி.வா.சா.ஆ.1 முதல் 3 வரையான ஆவணங்கள் உங்கள் கைவசம் இருந்தது என்றால் சரி தான்.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.07.12 18:52:27 +0530

5) பி.வா.சா-ஆ.1 முதல் 3 வரையான ஆவணங்கள் இரு உண்மை ஆவணங்களாக ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் என்றால் சரி தான். இந்த வழக்கு தாக்கல் செய்யும் போது எதற்காக பி.வா.சா.ஆ.1 முதல் 3 வரையான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சாட்சியானவர் தானாக முன் வந்து நான் 2 செட் அமைத்துள்ளேன் அந்த 2 செட்டிற்கான தொகையை கொடுத்தால் போதுமென்று கூறுகிறார். இவ்வளவு நாட்கள் வாடகை எதுவும் கொடுக்காமல் 2 செட் நீங்கள் தான் கட்டினீர்கள் என்று பொய்யாக கூறுகிறீர்கள் என்றால் நான் அங்கு 2022 ம் ஆண்டு முதல் தற்போது வரை தொழில் செய்யவில்லை ஆனால் கரண்ட் பில் மட்டும் செலுத்தி வருகிறேன்.

6) நீங்கள் 22.03.2022 ல் ஒரு நோட்டீஸ் பிரதிவாதிக்கு அனுப்பினீர்கள் என்றால் சரி தான். அதற்கு பிரதிவாதி 07.04.2022 ல் ஒரு பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரி தான். மேற்படி அறிவிப்புகள் **பி.வா.சா.ஆ.4 மற்றும் பி.வா.சா.ஆ.5** ஆகும். அதன் பின்னர் பிரதிவாதி 09.06.2023 அன்று ஒரு நோட்டீஸ் அனுப்பினாரா என்றால் அனுப்பினார் எனக்கு கிடைத்தது. மேற்படி அறிவிப்பு **பி.வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.07.12 18:52:33 +0530

7) பி.வா.சா.ஆ.6 அறிவிப்புக்கு ஏதாவது பதில் அறிவிப்பு அனுப்பினீர்களா என்றால் பி.வா.சா.ஆ.6 நோட்டீஸ் எனது கையில் கிடைக்கவில்லை என்று சாட்சி கூறுகிறார். பி.வா.சா.ஆ.6 நோட்டீசை உங்கள் மகன் அனீஸ் பெற்றுக் கொண்டார் என்று அஞ்சலக ஒப்புதல் அட்டையில் உள்ளது என்றால் சரி தான். அந்த அஞ்சலக ஒப்புதல் அட்டை ஆவணம் **பி.வா.சா.ஆ.7** ஆகும். 09.06.2023 அன்றே நீங்கள் நோட்டீசை பெற்றுக் கொண்டு 18.07.2023 அன்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரி தான்.

8) இந்த வழக்கில் நீங்கள் பி.வா.சா.ஆ.6 நோட்டீசையும் மற்றும் பி.வா.சா.ஆ.1 முதல் 3 குத்தகை ஒப்பந்த ஆவணங்களையும் இவ்வழக்குரையில் கூறவில்லை என்றால் நான் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன் என்று சாட்சி கூறுகிறார். எல்லா உண்மை சங்கதிகளையும் மறைத்து ஆவணங்களையும் மறைத்து சுத்தமான கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகாததால் நீங்கள் கோரும் பரிகாரம் உங்களுக்கு கிடைக்கக் கூடியது அல்ல என்றால் சரியல்ல.

9) நீங்கள் இன்றயை தேதி வரை உள்ள வாடகை பாக்கியை கொடுத்து தபசில் சொத்தில் உள்ள தீவன பாத்திரங்களையும் கொடுத்து தபசில் சொத்தை காலி செய்து, பிரதிவாதியிடம் ஒப்படைக்க கடமைப்பட்டுள்ளீர்கள் என்றால் சரியல்ல. ஆகவே

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.07.12 18:52:38 +0530

பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் கோருரிமை அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.07.12 18:52:44 +0530